# போற்றி; போற்றி! வஞ்சக வேந்தே போற்றி!

பேரறிஞர் அண்ணா அவர்கள், தனது 'ஆரியமாயை' நூலில்

**"போராசைப் பெருந்தகையே போற்றி!
பேச நா இரண்டுடையாய் போற்றி!
தந்திர மூர்த்தி போற்றி!
தாசர் தம் தலைவா போற்றி!
வஞ்சக வேந்தே போற்றி!
வன்கண நாதா போற்றி!
கொடுமைக் குணாளா போற்றி!
.... படுமோசம் புரிவாய் போற்றி!
சிரித்திடு நரியே போற்றி!"**

– எனப் புதுமையான 'போற்றித் திருப்பா' ஒன்றினை எழுதியிருந்தார்!

நமது நாட்டின் பிரதமர் மோடி அவர்களின் செயல்களோடு பொருத்திப் பார்க்கையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று எழுதிய அத்தனை வரிகளும், எத்தனைப் பொருத்தமாகப் பொருந்துகிறது; பார்த்தீர்களா?



**"பேச நா இரண்டுடையாய் போற்றி!"** என்ற வரியைத் தவிர; மற்றவை அட்சர சுத்தமாக அப்படியே பொருந்தவில்லையா? நமது பிரதமர் மோடி பேச்சுக்களைக் கேட்கும் போது அந்த வரியை எப்படி 'பொருத்தமில்லாத வரி' என்று கூற இயலும்? – எனக் கேட்டிடத் தோன்றும், உண்மை தான்!

இப்போதெல்லாம் மோடி அவர்களின் பேச்சைக் கேட்கும் போது, **'பேச நா இரண்டுடையாய்'** – என்பதற்கு பதிலாக, **'பேச நா பலவுடையாய்'** – என்றிருந்திருந்தால், மேலும் மிக மிகப் பொருத்தமாக இருந்திருக்குமோ என்று எண்ணிடத் தோன்றுகிறது!

அத்தோடு

**"உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவாய் போற்றி!
கள்ளமே உள்ளமாய் கொண்டாய் போற்றி!
பசுத்தோல் போர்த்திய புலியே போற்றி!
பதவியைக் காக்க பத்தும் செய்வாய் போற்றி!"**

– என இன்னும் பல 'போற்றி' களை இணைத்து 'திருப்பா' எழுதிடும் துடிப்பு எழுகிறது! 'இது என்ன துதிபாடலா? தூற்றுதலா?' என எண்ணிடத் தோன்றும்! இரண்டுமில்லை...

நமது பிரதமரின் உண்மை சொரூபத்தைத் தோலுரிக்கப் பயன்படும் பழைய பாடல்; அண்ணா அருளியது; அவ்வளவு தான்!

கடந்த 2014-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் மோடி பேசிய **'அச்சே தின்'** பேச்சைக் கேட்டுப் பூரித்து போற்றியவர்கள், அந்தப் பேச்சைக் கேட்டு இந்தியாவின் எதிர்காலத்தைப் பற்றி பல வண்ணக் கனவுகள் கண்டனர்!

'ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு' என்ற மோடியின் அறிவிப்பு 'ஜூம்லா' அறிவிப்பு என்பதறியாது **"ஆபத்பாந்தவா; போற்றி.! அனாதை ரட்சகா போற்றி..."** எனப் பாடி வாக்களித்தார்கள்; மக்கள்! 'வேலையில்லாத் திண்டாட்டத்தை நாட்டை விட்டே விரட்டப் போகிறார்' என விழியெல்லாம் ஒளி உமிழ அன்று வாக்களித்தனர்.

பிறகு என்ன ஆயிற்று? மோடி கொடுத்த வாக்குறுதி காற்றோடு போனது மட்டுமல்ல; பலர் இருந்த வேலையையும் இழந்ததுதான் பலன்! 2014-ஆம் ஆண்டு பொதுத்துறை நிறுவனங்களில் 16.9 இலட்சமாக இருந்த வேலைவாய்ப்பு 2022-ல் 14.5 இலட்சமாகக் குறைந்து விட்டது. பி.எஸ்.என்.எல். நிறுவனத் தில் மட்டும் 1,81,127 பேர் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர்.

இவை மட்டுமின்றி எம்.டி.என்.எல்., எஸ்.ஏ.ஐ.எல். போன்ற பொதுத்துறை நிறுவனங்களில் ஏறத்தாழ 1 லட்சத்து 75 ஆயிரம் பேர் மோடி ஆட்சியில் தங்களது வேலைகளைப் பறிகொடுத்துள்ளனர் என்று ஒரு புள்ளி விவரம் கூறுகிறது.

**மோடியின் வாக்குறுதிப்படி 2 கோடி வேலை வாய்ப்பும் கிடைக்கவில்லை. இருந்த வேலைகளும் பறிபோய்க் கொண்டிருக்கின்றன. அன்று தந்திரமாகப் பேசி மக்களின் வாக்கை அபகரித்தவரை "தந்திரமூர்த்தியே போற்றி" என்று பாடிடத்தானே தோன்றும்!**

நாட்டிலே ஜனநாயகப் படுகொலைகள் நாள்தோறும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சிகளால் ஆட்சி அமைக்க முடியாதபடி, மக்கள் எண்ணத்துக்கு எதிராக 'குதிரை பேரங்கள்' நடத்தப்படுகின்றன.

அரசு இயந்திரங்களை வைத்து எதிர்க்கட்சிகளை மிரட்டி ஒடுக்க நினைக்கின்றனர்! எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களைச் செயல்படாது தடுத்திட, ஆளுநர்கள் பயன்படுத்தப் படுகிறார்கள்! இந்தியாவின் பொருளாதாரத்தை இரண்டொரு கார்ப்பரேட் கம்பெனிகளே நிர்ணயிக்குமளவுக்கு அது சீரழிந்து கொண்டிருக்கிறது!

நாடாளுமன்ற ஜனநாயகம் என்பது வெறும் வார்த்தை வடிவில் தான் இருக்கிறது! பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு மட்டுமின்றி எல்லா பொருட்களுமே விலையேறி மக்களை விழிபிதுங்கி நிற்க வைத்துள்ளது.

இந்த நிலையிலும், 'வலதுசாரி' எனும் போர்வையில் திரியும் சில 'அவாள்கள்' மோடிக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பதைக் காணும்போது அறிஞர் அண்ணா அன்று சொன்ன,

**'தாசர் தம் தலைவா போற்றி!' –** என்ற வரிகள் அப்படியே மோடிக்கு எப்படிப் பொருந்தி வருகிறது பார்த்தீர்களா?

ஒன்றிய அரசு தன்னிச்சையாகக் கொண்டுவந்த மூன்று வேளாண் சட்டத்திருத்த மசோதாக்களை வாபஸ் பெறக்கோரி விவசாயிகள் ஓராண்டு காலம் வீதியிலே குடும்பம் குடும்பமாகக் கூடி இருந்து போராடினர்!

இந்தப் போராட்டம் குறித்து வெளிநாட்டு நாடாளுமன்றமே விவாதிக்குமளவு போராட்டத்தின் விளைவுகள் பரவின. சர்வதேச சூழலியல் போராளிகள் கருத்து தெரிவிக்குமளவு போராட்டம் சூடுபிடித்தது. ஏறத்தாழ 750 பேர் இந்த விவசாயப் போராட்டத்தின் காரணமாக தங்களது இன்னுயிரை இழந்ததாகக் கூறப்பட்டது.

இந்தப் போராட்டம் நடந்த ஓராண்டு காலமும் இதுகுறித்து கேலியும் கிண்டலும் செய்து வந்த இந்த நாட்டின் பிரதமர், இறுதியாக பணிந்தார். 2020-ஆம் ஆண்டு விவசாயிகள் போராட்டம் தொடங்கப் பட்ட நிலையில், போராடும் விவசாயிகளைக் கொச்சைப்படுத் திடும் விதத்தில் ஏளனமாக **'அன்டோலன் ஜீவி'** அதாவது 'ஏதாவது போராட்டத்தை வைத்து வாழ்க்கை நடத்துபவர்கள்' என்றெல்லாம் ஏளனப் பேச்சு பேசிக் கொண்டே வந்தவர்,




இறுதியில் பணிந்தார்!

**அந்தப் பணிவுகூட விவசாயிகளின் போராட்டத்துக்கு மதிப்பளித்து அல்ல; பஞ்சாப், உ.பி. மாநில தேர்தல்கள் வந்துவிட்டால் மக்களைச் சந்திக்க வேண்டுமே என்ற பயத்தில் ஏற்பட்ட பணிவு!**

**போராட்ட காலத்தில் அந்த விவசாயிகளுக்கு பா.ஜ.க.வினரால் சூட்டப்பட்ட பட்டங்கள் தான் எத்தனை; எத்தனை! 'தேச எதிரிகள்', 'காலிஸ்தான்', மற்றும் மாவோயிஸ்ட்டுகளோடு தொடர்புடையவர்கள், 'தீவிரவாதிகள்', 'துக்கடா துக்கடா கூட்டம்', இப்படி அடுக்கிக்கொண்டே போனார்களே; அப்போதெல்லாம் அவைகளை ரசித்த பிரதமர் மோடி, தேர்தல் நெருங்கியதும், ஏற்பட்ட அழுத்தத்தால் அடிபணிந்தார்!**

ஓராண்டு காலத்துக்கு மேலாக பயங்கரவாதிகள், தீவிரவாதிகள், தேச விரோதிகள் என பி.ஜே.பி.யினராலும், ஒன்றிய அமைச்சர்களாலும் உருவகப்படுத்தப்பட்டவிவசாயிகள், தேர்தல் நெருங்கிய காரணத்தால் மோடிக்கு சகோதரர்கள் ஆகிவிட்டனர்.


சிலந்தி

"நான் எனது விவசாயச் சகோதரர்களை வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் இல்லத்துக்கும், நிலங்களுக்கும் திரும்பச் செல்லுங்கள். இந்தப் புனித நாளில் புதிய துவக்கத்தை நாம் துவங்குவோம்". என்று பேசியதை நினைவுபடுத்திப் பாருங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்று குறிப்பிட்ட 'வஞ்சக வேந்தே போற்றி'! என்ற வரிகள் மோடிக்காக உயிர் பெற்று வந்தது போலத் தோன்றவில்லையா?

இப்போது மணிப்பூர் கலவரத்தால் அந்த மாநிலமே மயான பூமியாகக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. நூற்றுக்கணக்கானோர் கொலையுண்டுள்ளனர். குடியிருக்கும் வீடுகளெல்லாம் குடி கேடர்கள் வைத்த தீயில் கருகி சாம்பலாகின்றன! பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு பட்டப்பகலில் பகிரங்கமாக இழுத்துச் செல்லப்படுகின்றனர். அவர்கள். வன்புணர்ச்சிக்கு ஆளாகின்றனர்!

இந்த நாட்டின் பிரதமர் மோடி, இந்த கொடும் நிகழ்வுகள் நடந்து இரண்டு மாதம் சென்றபின் இரண்டு மூன்று வரிகளில் கண்டனம் தெரிவித்துவிட்டுத் தனது கடமை முடிந்துபோல அடுத்த வேலைகளுக்குப் போய் விட்டார். பிறகு எங்குமே அவர் இந்தக் கொடுஞ்செயல் குறித்து வருத்தம் தெரிவித்தோ, கண்டனம் கூறியோ பேசிடவில்லை!

குஜராத் மாநிலத்தின் முதலமைச்சராக மோடியிருந்தபோது, இதே போன்று ஒரு படு பயங்கரக் கலவரம் அங்கே அரங்கேறியது! அப்போது நடைபெற்ற கொடூரங்களை நினைவு படுத்தினால், நம்மில் பலருக்குத் தூக்கம் கெடும். அந்த அளவு ஒரு குறிப்பிட்ட மத மக்கள், கட்ட விழ்த்து விடப்பட்ட ஒரு கூட்டத்தால் கொலை செய்யப்பட்டனர், பெண்கள் கற்பழிக்கப்பட்டனர் – குடியிருந்த இடங்கள் தீக்கிரையாகி சொந்த மண்ணிலேயே அகதிகளாகி தவித்தனர்!

அப்போதே குஜராத் முதல்வர் மோடி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறக் கூட வெளியே வரவில்லை. அன்றைய இந்தியப் பிரதமர் வாஜ்பாயி அங்கே சென்றார்! மக்களுக்கு ஆறுதல் கூறினார் – அவர்கள் நிலைமை கண்டு நெஞ்சுருகினார்!

இதெல்லாம் மோடிக்கு மறந்திருக்காது! "ஆட்சியில் இருப்பவர்கள் ராஜ தர்மத்தை மறந்து விடக் கூடாது" – என மோடிக்கு உறைக்கும் வண்ணம் அறிவுரை கூறினார்!

ஏறத்தாழ இன்றைய மணிப்பூர் கொடுமைகளும் குஜராத் கொடுமைக்கு நிகரானது தான்! ஒவ்வொரு இந்திய மகனும் தலை குனிந்து நிற்கிறான்! இன்றும் மணிப்பூர் இயல்பு நிலைக்குத் திரும்ப வில்லை என்ற நிலைதான் செய்தியாக வருகின்றன!

பிரதமர் மோடி, வாஜ்பாய் போல அங்கே சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் கூடத் தெரிவிக்கச் செல்லாமலிருப்பதைக் காணும்போது;

**கொடுமை குணாளா போற்றி
வன்கண நாதா போற்றி!**

என்றுதானே நேர்மையான துதிபாடிகளால் துதிபாட முடியும்!

நமது பிரதமர் மோடி, பேச்சிலே தேன் குழைத்துப் பேசி, நெஞ்சிலே வஞ்சம் இருந்தாலும் அது தெரியாது. நடை உடை பாவனை மூலம் அவர் காட்டிய மிதமிஞ்சிய நடிப்பால் நாட்டு மக்களை ஏமாற்றி வந்தார்! இப்போது வேஷம் கலையத் தொடங்கியுள்ளது. சில காலம் ஏமாற்றலாம்; பலரை பல நாள் ஏமாற்ற முடியாது – என்ற நிலை உருவாகிவிட்டது. அவரது ஆதரவாளர்களே அவரை உணரத் தொடங்கி விட்டனர்!

**'படுமோசம் புரிவாய் போற்றி!
சிரித்திடும் நரியே போற்றி!**

எனப் பாடிட வேண்டிய நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டு விட்டனர்!

மனிதரும் மாற்றி மாற்றி பேசி மக்கள் மத்தியில் நாடகமாடினார்! இப்போது வேஷம் கலையத் தொடங்கி விட்டது!

**"எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே... சொந்த நாட்டிலே..... நம் நாட்டிலே...
சத்தியம் தவறாது உத்தமர் போலவே நடிக்கிறார்..."**

– என்று கலைஞர் அவர்கள் திரைக்கதை – வசனம் எழுதி வெளிவந்த 'மலைக்கள்ளன்' திரைப் படத்தில் எம்.ஜி.ஆர். வாயசைக்க அந்தப் பாடல் வரும். அந்தப் பாடல் வரிகள் இப்போது மக்கள் மனதில் எதிரொலிக்கத் தொடங்கி விட்டன! இப்போது நாடெங்கும் 'இந்தியா (I.N.D.I.A.) வெல்லும்' என்பதே குரலாக உள்ளது.!

**கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவு கட்ட 'இந்தியா' வெல்லட்டும்' நாட்டு மக்களுக்கு நிம்மதி திரும்பட்டும்!**